187

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1984 மார்ச் 15.

பங்குனி 2, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு-2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோயில்களுக்கு மின்வசதி

***96 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்):** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1983 அன்றுள்ளபடி, தமிழ்நாட்டில், இந்து அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் உள்ள கோயில்களில், மின்வசதி இல்லாதவை எத்தனை ?

(இ) அக்கோயில்களுக்கு மின்வசதி செய்ய, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) 8,642.

(இ) நிதிவசதியின்மையால் இத்திருக்கோயில்களில் மின்வசதி செய்யப் படவில்லை. நிதி வசதி சீரானவுடன் மின்வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயில்களில் விழாக்காலங்களிலாவது மின்வசதி செய்கிற ஏற்பாடுகளை இந்து அறநிலையத் துறை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் சாதாரணமாக ஆலயங்களில் விழாக்கள் நடைபெறுகிறபோது, தனியாருடைய உபயங்களைக் கொண்டு அப்படிப்பட்ட மின் வசதிகள் செய்யப்படும் என்று கருதுகிறேன். ஆனால் நிரந்தரமான மின் வசதியைப்பற்றித்தான் இங்கே வினா எழுப்பப் பட்டிருக்கிறது. நிரந்தரமான வகையில் செய்ய முடியவில்லை என்பதைத் தான் நான் பதிலில் தந்திருக்கிறேன்.